இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-09-2025

# கொட்டித் தீர்த்த மழையில் இடியாய் இறங்கிய உரை!

கரூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவைக் காண வானமே, மழையாய் வந்து இறங்கியது. “கொட்டும் மழையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், இதே நாளில் வடசென்னைப் பகுதியில் அமைந்திருக்கும் ராபின்சன் பூங்காவில் கழகத்தைத் தொடங்கி வைத்தார்கள். அவ்வாறு தொடங்கி வைத்த இந்தக் கழகம், 75-ஆம் ஆண்டுகாலம் மட்டுமல்ல, நூற்றாண்டும் நாம் காணப் போகிறோம்” என்று வரலாற்றுக் காட்சியை விவரித்து தனது உரையைத் தொடங்கினார் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**கொள்கையை உருவாக்கித் தந்த தலைவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள். கொள்கைக்கு அரசியல் வடிவம் கொடுத்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். கொள்கையை ஆட்சியின் மூலமாகச் செயல்படுத்திய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த நூறு ஆண்டு கால எழுச்சிக்கும், ஏற்றத்துக்கும் பெரியாரும் அண்ணாவும் திராவிட முன்னேற்றக் கழகமும்தான் காரணம். இதனை உணர்த்தும் விழாவாக முப்பெரும் விழா அமைந்திருந்தது.**

“இது முப்பெரும் விழாவா, விரைவில் நாம் சந்திக்க இருக்கும் வெற்றி விழாவா...?” என்று தலைவரால் பாராட்டப்படும் அளவுக்கு கரூரில் திரும்பிய பக்கமெங்கும் மனிதத் தலைகள் என்று சொல்லத் தக்க வகையில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார் முன்னாள் அமைச்சர், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி.

ஒரு லட்சம் நாற்காலிகள் போடப்பட்டு இருந்தது என்றால், ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பொதுக்கூட்டத் திடலைச் சுற்றிலும் இருந்தார்கள். பொதுக்கூட்டத் திடலுக்குள் சாலை போடப்பட்டு, அதனுள் வேனில் வந்தார் தலைவர். ‘கோடு போடச் சொன்னால் ரோடு போட்டுவிட்டார் செந்தில்பாலாஜி’ என்று இதனைக் குறிப்பிட்டார் தலைவர்.

கருமேகங்கள் சூழ, மாலை வேளையில் தொடங்கியது நிகழ்ச்சி. விருதுகள் வழங்கப்பட்டதும், வானில் இருந்து மழை கொட்டியது. அதைத் தொடர்ந்து தலைவர் ஆற்றிய உரை என்பது இடிமுழக்கமாக அமைந்திருந்தது.

★ தொண்டர்களாகிய நீங்கள்தான் என்னைக் கழகத் தலைவர் ஆக்கினீர்கள். அதுமுதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் கழகம் வெற்றி பெற்று வருகிறது.

★ தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக்கினீர்கள். திராவிட மாடல் அரசானது இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்ந்து வருகிறது.

★ நமது வெற்றிப் பயணம், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடன் 2026-இலும் நிச்சயம் தொடரும்! திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயம் அமையும்!

★ “கழகம் நம்மைக் காத்தது! நாம் கழகத்தைக் காக்க வேண்டும்” என்று உழைக்கும் உங்களைப் போன்ற உடன்பிறப்புகள் இருக்கும்வரை எந்தக் கொம்பனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தோற்கடிக்க முடியாது!

★ தமிழ்நாட்டைக் காக்கும் காவல் அரண், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான்!

★ தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இடையூறு செய்வதுதான் காவிக் கொள்கை!

★ தி.மு.க.வுக்கு மாற்று, மாற்றம் என்று சொன்ன அனைவரும் மாறினார்கள்... மறைந்துபோனார்கள்... ஆனால், தி.மு.க. மட்டும் மாறவில்லை! தமிழ்நாட்டு மக்கள் மனதில் இருந்து என்றைக்கும் மறையவில்லை! இதுதான் தமிழ்நாடு பாலிட்டிக்ஸ்!

★ நம்முடைய கொள்கைதான் நம்முடைய பலம்!

★ ரெய்டுகளில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.க.-வை அடகு வைத்திருக்கிறார் பழனிசாமி. அன்று எம்.ஜி.ஆர் சொன்னது ‘அண்ணாயிசம்’. இன்று பழனிசாமி செய்வது ‘அடிமையிசம்’. ‘அமித்சாவே சரணம்’.

★ நேற்று டெல்லியில் கார் மாறி மாறிப் போன பழனிசாமியைப் பார்த்து “காலிலேயே விழுந்த பின்னர் முகத்தை மூட கர்ச்சீப் எதற்கு?” என்று கேட்கிறார்கள்.

★ ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோதச் செயல்பாடுகள் அனைத்தையும் துணிச்சலாக நேருக்கு நேராக எதிர்த்துக்கொண்டு இருக்கிறோம்!

★ இந்த மண்ணைக் காக்கும் பொறுப்பும் கடமையும் நமக்குத்தான் இருக்கிறது!

★ எந்நாளுமே அடக்குமுறைக்கு இங்கே நோ எண்ட்ரிதான்! ஆதிக்கத்துக்கு இங்கே நோ எண்ட்ரிதான்! திணிப்புக்கு இங்கே நோ எண்ட்ரிதான்! மொத்தத்தில் இங்கே பா.ஜ.க.வுக்கு நோ எண்ட்ரிதான்! ஏன் என்றால், இது பெரியார் - அண்ணா - கலைஞர் - செதுக்கிய தமிழ்நாடு!”

- என்று இடியாய் இறங்கி வெடித்துள்ளார் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**தலைமுறை தலைமுறையாக நாம் போராடி - எத்தனையோ பேர் உயிரையே தியாகம் செய்து பெற்றுத் தந்த உரிமைகள் அனைத்தும், நம் கண் முன்னே பறிபோக அனுமதிக்கலாமா? அதற்கு பா.ஜ.க.வையும் அதன் கொத்தடிமைக் கூட்டத்தையும் வீழ்த்தியாக வேண்டும் என்பதுதான் தலைவர் இட்ட கட்டளை ஆகும்.**

**வரப்போகும் தேர்தல் களத்தில் - அதிலும் குறிப்பாக எதிரிகளும், துரோகிகளும், எதிரிகளால் உருவாக்கப்படும் ஏழாம் படைகளும் நூலாம்படைகளும் 2026 ஆண்டு துடைத்தெறியப்படுவார்கள் என்பது உறுதி, உறுதி. அதற்கு உறுதி ஏற்கும் விழாவாக இந்த முப்பெரும் விழாவை நிகழ்த்திக் காட்டி விட்டார் தலைவர்.**

நமது விழாக்கள் எதுவும் கூடிக் கலையும் விழாக்கள் அல்ல, கூச்சல் போடும் விழாக்கள் அல்ல. கொள்கையைச் சொல்லும் விழாக்கள். கொள்கையை கூர்தீட்டிக் கொள்ளும் விழாக்கள். கொள்கையை வெற்றி பெற வைக்க வியூகம் வகுக்கும் விழாக்கள்... என்பதை உணர்த்தும் வகையில் அவரது உரை அமைந்திருந்தது.

தமிழ்நாட்டைக் காக்கும் அரணாக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இருக்கிறது. தமிழ்நாட்டைச் சூழ வரும் ஆபத்தில் இருந்து காக்கும் வல்லமையும், துணிவும், தெளிவும், தியாக உள்ளமும் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனுக்குத்தான் உண்டு. அத்தகைய தொண்டனுக்கு கட்டளையிடும் உரையாக தலைவர் உரை இருந்தது.

**கோடு போடச் சொன்னால் ரோடு போடுவார்கள் என்பதைப் போல, ரோடு போடச் சொன்னால் நாடு பிடிப்பார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள்.**



கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக, வெள்ளிச் செங்கோலை நினைவுப் பரிசாக மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார். அருகில் கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.



கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக, மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வீரவாளும் நினைவுப் பரிசும் வழங்கினார். அருகில் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.

## முப்பெரும் விழாவில் பெற்ற விருதுக்கான தொகையை

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - சோ.மா.இராமச்சந்திரன் தி.மு.கழக நிதிக்கு வழங்கினர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**கரூர், செப்.19–**

**கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழக முன்னணியினருக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தார்.**

அதில், பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மற்றும் கலைஞர் விருது பெற்ற மூத்த மூன்னோடி சோ.மா.இராமச்சந்திரன் ஆகியோர் தங்கள் விருதுக்காக கிடைத்த தொகையான ரூபாய் மூன்று இலட்சத்தினை தி.மு.கழக வளர்ச்சி நிதிக்கு மேடையிலேயே கழகத் தலைவரிடம் வழங்கினர்.

இதை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையின் நிறைவுப் பகுதியில் குறிப்பிட்டார்.

# கிண்டியில் - வீரமங்கை இராணி வேலுநாச்சியார் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, செப்.19–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலு நாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (19.9.2025) காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார்கள்.

வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்கள், மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி - முத்தாத்தாள் நாச்சியார் தம்பதியரின் மகளாக 1730 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலே வாள் வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம், யானையேற்றம் உள்ளிட்ட போர்க்கலைகளைக் கற்றார்.

1746ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்தார். அதனால், சிவகங்கை சமஸ்தானத்தின் இராணியானார். 1772 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் சிவகங்கையின் மீது போர் தொடுத்தனர். காளையார்கோவில் போரில் மன்னர் முத்துவடுகநாதர் கடுமையாகப் போர் புரிந்தபோதும் சூழ்ச்சி காரணமாக வீர மரணமடைந்தார்.

அந்நிலையில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள், சிவகங்கையை விட்டு வெளியேறி, காடுகள் வழியே திண்டுக்கல்லை அடைந்தார். அங்கு கோபால் நாயக்கர் உதவியுடன் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோர் உதவியையும் பெற்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட முடிவு செய்தார். ஹைதர் அலி வேலுநாச்சியாரின் போர்த்திறனைப் பாராட்டி ஆயுதங்களையும், படை வீரர்களையும் வழங்கினார். இழந்த சிவகங்கையை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற வைராக்கியத்துடன், சிவகங்கையை நோக்கி படை நடத்திச் சென்று, ஆவேசத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.

வீரமங்கை வேலுநாச்சியாரின் மகளிர் படைத்தளபதியாகத் திகழ்ந்தவர் குயிலித்தாய். அவர் அப்போரில் ஆங்கிலேயரை அழிப்பதில், வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று உடம்பில் தீ வைத்துக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதங்கிடங்கில் குதித்து அவர்களின் ஆயுதங்களை அழித்தார். அதனால், அஞ்சி ஓடிய வெள்ளையரை விரட்டி சிவகங்கை அரியணையை மீண்டும் கைப்பற்றினார் வீராங்கனை வேலுநாச்சியார்.

அதன்பின், 16 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையைச் சிறப்பாக ஆட்சி செய்தார். மக்கள் நலனுக்காக நிலம், வரி, வேளாண்மை, கல்வி, பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். பின்னர், தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருக்கு ஆட்சியை வழங்கி அவருக்குத் துணை புரிந்தார்.

வட இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்த வீராங்கனை ஜான்சி ராணி வாழ்ந்த (கி.பி. 1835 - 1858) காலத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே, ஆங்கிலேயர்களை எதிர்த்த “முதல் இந்திய விடுதலைப் பெண் போராளி” வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் 1796 டிசம்பர் 25 அன்று மறைந்து அழியாப் புகழ் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ் மண்ணின் தலைசிறந்த வீராங்கனை வேலுநாச்சியார் அவர்களின் வீரத்தினை வருங்காலத் தலைமுறையினர் அறிந்து போற்றிடும் வகையில், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வேலுநாச்சியார் திருவுருவச் சிலை நிறுவப்படும் என 2024-2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 50 இலட்சம் செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (19.9.2025) திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.